TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.விதி 154 இன் கீழ்)

C 8044395

1. District மாவட்டம்: Vellore PS காவல்நிலையம்: Vigilance & Anti Corruption Vellore Year ஆண்டு: 2021 FIR No முதல் தகவல் அறிக்கை எண்: 15/2021 Date நாள்: 01.10.2021

2. (i) Act சட்டம்: The prevention of corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a) of PC (Amendment) Act 2018
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Cr.P.C Sections பிரிவுகள்: 102 Cr.P.C
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்:

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 30.09.21 Date to நாள் வரை: –
Time Period நேர அளவு: Time from நேரம் முதல்: – Time to நேரம் வரை: –
(b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 01.10.2021 Time நேரம்: 15.30 hrs
(c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: Volume-III Time நேரம்: 16.30 hrs

4. Type of Information Written/ Oral தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக: - written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், திசையும்: – O/o the Joint Sub Registrar I & II Combined registration Complex Vellore, Vellore District. South East 1.5 kms.
Beat Number முறைக் காவல் எண்: (b) Address முகவரி:

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையின் அந்த காவல் நிலையத்தின் பெயர் District மாவட்டம்: –

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: R.Vinayagamoorthy (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர்: Radhakrishnan
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 23.05.1983 (d) Nationality நாட்டினம்: Indian (e) Passport No வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்: –
Date of Issue வழங்கப்பட்ட நாள்: – Place of Issue வழங்கப்பட்ட இடம்: –
(f) Occupation தொழில்: Senior Revenue Inspector (g) Address முகவரி: District Inspection cell office, Collectorate, Vellore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. S. Vanitha, Joint Sub Registrar-I, District Registrar Cadre, District Registrar office, Vellore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையீட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 1/10/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 01/10/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.10.2021 @ 17.00 hrs

Name: பெயர் ........ S. Vijay,
Rank: நிலை .................. No. எண் ........
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Vellore.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது. இன்று 01.10.2021-ஆம் தேதி சுமார் 15.30 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, R.விநாயகமூர்த்தி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர் R.விநாயகமூர்த்தி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, பொருள்: இரு துறை திடீர் கூட்டு சோதனை – வேலூர் மாவட்டம் வேலூர் பதிவு மாவட்டம், வேலூர் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.09.2021 அன்று இருதுறை திடீர் கூட்டு சோதனை மேற்கொண்டது - கைப்பற்றப்பட்ட பணம், ஆவணம் மற்றும் செயல்முறை – ஒப்படைப்பு - நடவடிக்கை எடுக்க கோருதல் - புகார் அளித்தல் - தொடர்பாக. நான் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளர், உள்ளேன். 30.09.2021-ஆம் தேதியன்று மாலை சுமார் 15.15 மணியளவில் நான் என்னுடைய அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, வேலூர் மாவட்டம், வேலூர் ஒருங்கிணைந்த பத்திவுத்துறை வளாகத்தில் அமைந்துள்ள எண்-1 இணை சார்பதிவாளர் மற்றும் எண்-2 இணை சார்பதிவாளர் அலுவலகங்களில் பத்திரம், பிற பதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக இணை சார்பதிவாளர்-1 மற்றும் அலுவலக பணியாளர்கள் தனித்தனியாக பதிவு செய்யப்படும் பத்திர மதிப்புகளுக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைதரகர்கள் மூலமாக கையூட்டு பெறுவதாகவும் மற்றும் இடைத்தரகர்கள், ஆவண எழுத்தர்கள் மேற்படி அலுவலகத்தில் ஆதிக்கம் செலுத்துவதாகவும் எனக்கு நம்பகமான தகவல் கிடைத்தது அதனை நான் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்

ஆய்வாளர் திரு.S.விஜய் அவர்களுக்கு தகவல் தெரிவித்து, மாலை சுமார் 16.15 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு வேலூர் பிரிவு அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு, வேலூர் ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகத்திற்கு இரு துறை திடீர் சோதனை மேற்கொள்ள மாலை சுமார் 16.30 மணிக்கு சென்று மேற்படி வேலூர் இணை பதிவாளர் அலுவலகத்தினை குழுவினருடன் கண்காணித்தோம். இந்த ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக கட்டிடத்தின் தரைத்தளத்தில் வேலூர் எண்-1 இணை சார்பதிவாளர் மற்றும் எண்-2 இணை சார்பதிவாளர் அலுவலகங்கள் அமைந்துள்ளன. அப்போது, பொது மக்கள் ஏராளமானோர் இணை சார் பதிவாளர் அலுவலகத்திற்குள்ளேயும், அலுவலக வளாகத்திற்குள்ளேயும் காத்திருந்தனர். மேலும், குறிப்பிட்ட சில நபர்கள் அலுவலகத்திற்குள்ளே செல்வதும், மீண்டும் வெளியே வந்து பொது மக்களிடம் பேசிவிட்டு மீண்டும் அலுவலகத்திற்குள்ளே செல்வதுமாக இருந்தனர்.

2. இணை சார் பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்துக்கொண்டிருந்தபோது, எண்-1 இணை சார் பதிவாளர் அவர்கள் அவரது இருக்கையை விட்டு எழுந்து, ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகத்தை விட்டு வெளியில் வந்து, அங்கு நின்றிருந்த ஆட்டோ ஒன்றில் ஏறி அமர்ந்தார். உடனே நானும் குழுவினரும் அவரிடம் சென்று என்னையும் குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டு, வந்த நோக்கத்தை தெரிவித்து, அவரை அலுவலக அறைக்கு உள்ளே அழைத்து சென்று இணை சார் பதிவாளர் அவர்களை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் வனிதா என்றும், 10.02.2021 ஆம் தேதி முதல் வேலூர் இணை சார் பதிவாளர்-1 பணிபுரிந்து வருவதாகவும், தான் தற்சமயம் கள ஆய்விற்காக செல்வதற்காக வெளியே வந்ததாக தெரிவித்தார். பின்னர், இணை சார் பதிவாளர்-1 திருமதி.S.வனிதா மற்றும் ஆஜரில் இருந்த அலுவலர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் எங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டும் எங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது.

3. இணை சார் பதிவாளர்-1 திருமதி.வனிதா அவர்களை காவல் ஆய்வாளர் திருமதி.S.விஜயலட்சுமி அவர்கள் மறைவிடத்திற்கு அழைத்து சென்று திரேக சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.900/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரிக்க, அந்த பணம் தனது சொந்த செலவிற்காக எடுத்து வந்ததாகவும், அந்த பணத்தை இணை-1 சார் பதிவாளர் அலுவலக தனி நபர் பண இருப்புப்பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாக சொன்னதால், அந்த பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

4. இணை சார் பதிவாளர்-1 அலுவலகத்திற்கு எதிரில் உள்ள இணை சார் பதிவாளர்-2 அறையில் இருந்த நபரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் நித்தியானந்தம் என்றும், தான் கண்காணிப்பாளராக இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், தற்சமயம் இணை சார் பதிவாளர்-2 பணியிடம் காலியிடமாக உள்ளதால், கடந்த மார்ச்-2021 முதல் கூடுதல் பொறுப்பாக இணை சார் பதிவாளர்-2 பணியையும் கவனித்து வருவதாக சொன்னார். அவரிடம் பணம் ரூ.400/- இருந்தது, தனது சொந்த செலவிற்காக எடுத்து வந்ததாக கூறியதால் அந்த பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

5. பின்னர், மேற்படி எண்.1 மற்றும் எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த கீழ்கண்ட நபர்களை திரேக சோதனை செய்து அவர்கள் வசம் இருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் மற்றும் உரிய விளக்கம் கூறியதால் அவர்கள் வசம் இருந்த தொகை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| **இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த அலுவலர்கள்** | | |
| 1. | திரு.E.அபிநந்தன், த/பெ இளங்கோவன், இளநிலை உதவியாளர் | ரூ.220/- |
| 2. | திரு.A. மோகன், த/பெ ஆனந்தன், Data Entry Operator | ரூ.19/- |
| 3. | திரு.J. பாபு, த/பெ ஜெயராமன், அலுவலக உதவியாளர் | ரூ.131/- |
| **எண்.2 இணை சார் பதிவாளர் அறையில் இருந்த அலுவலர்கள்** | | |
| 4. | திரு.நித்யானந்தம், த/பெ கோபால், கண்காணிப்பாளர்/ எண்-2 இணை சார் பதிவாளர் | ரூ.400/- |
| 5. | திரு.G.கணேசன, த/பெ கங்காதரன், உதவியாளர் | ... |
| 6. | திரு.சக்திசிவம், த/பெ குணசேகரன், உதவியாளர் | ரூ.50/- |

**கணினி அறையில் இருந்த அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| 7. | திரு. L. விழிவேந்தன் த/பெ லட்சாதிபதி, உதவியாளர் | ரு.171/- |
| 8. | திருமதி. சூரியகாந்தி, க/பெ வெங்கடேசன், Camera Operator, | ரு.185/- |
| 9. | திரு.G. குணசீலன், த/பெ கௌதமன், Data Entry Operator. | ரு.40/- |
| 10. | திரு.கேசவன், த/பெ குணாலன், Data Entry Operator | ரு.160/- |
| 11. | திரு.டீக்காராமன், த/பெ ஏழுமலை, இளநிலைஉதவியாளர் | ரு.500/- |

**பதிவறையில் இருந்த அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| 12. | திரு.உதயகுமார், த/பெ கிருஷ்ணன், பதிவறை எழுத்தர் | ரு.70/- |

6. பின்னர், காத்திருப்போர் அறையில் உட்கார்ந்திருந்த நபர்களை விசாரித்தும், அவர்களை திரேக சோதனை செய்து, அவர்கள் வசம் இருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் மற்றும் உரிய விளக்கம் கூறியதால் அவர்கள் வசம் இருந்த தொகை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

**அலுவலக வளாகத்தில் இருந்து டாகுமெண்ட் ரைட்டர்கள், இடைத்தரகர் மற்றும் பொது மக்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.ஆறுமுகம் (50/2021) த/பெ புருசோத்தமன், எண்.22, துளசி நகர், அரியூர், வேலூர் (ஆட்டோ டிரைவர்) | ரு.8,700/- |
| 2. | திரு.ஜெயசங்கர் (50/2021) த/பெ வெங்கடேசன், எண்.64, கேசவபுரம், பென்னாத்தூர், வேலூர் மாவட்டம் | ரு.4,000/- |
| 3. | திரு.லோகநாதன் (37/2021) த/பெ விநாயகம், (டெய்லர்) எண்.21, பள்ளத்தெரு, சத்துவாச்சாரி, வேலூர். | ரு.2,220/- |
| 4. | திரு.ரவி (51/2021) த/பெ முனிசாமி, எண்.117, காமராஜ் தெரு, கோவிந்தராஜ் நகர், பாகாயம், வேலூர் | ரு.2,000/- |
| 5. | திரு.சதாம்உசேன் (30/2021) த/பெ அயாத் பாட்ஷா, எண்.217, ரோஜா மேட்டுத்தெரு, கொணவட்டம், வேலூர் | ரு.1,415/- |
| 6. | திரு.பாலசந்தர் (63/2021) த/பெ கிருஷ்ணசாமி, **(Advocate)** எண்.6, 1-வது பிரதான சாலை, அண்ணா நகர் மேற்கு, வேலூர். | ரு.55,040/- |
| 7. | திரு.ஆறுமுகம் (66/2021)த/பெ ராமசாமி நாயக்கர், **(Advocate Clerk)** எண்.516, RTO ஆபிஸ் ரோடு, அவுசிங் போர்டு, சத்துவாச்சாரி, வேலூர். | ரு.7,950/- |
| 8. | திரு.ரவிக்குமார் (50/2021) த/பெ பூபதி, (Advocate Clerk) எண்.1/10, பொன்னியம்மன் கோயில் தெரு, சாய்நாதபுரம், வேலூர். | ரு.1,960/- |
| 9. | திரு.நந்தீஸ்குமார் (33/2021) த/பெ சாமிநாதன், (Advocate) எண்.3, எம்.ஜி.ஆர், நகர், செங்காநத்தம் ரோடு, | ரு.1,055/- |

| | | |
|---|---|---|
| | சலவன்பேட்டை, வேலூர். | |
| 10. | திரு.அறிவழகன் (33/2021) த/பெ கருணாநிதி, (Advocate) பிளாட் நம்பர்.49, 3-வது தெரு, பாரதியார் நகர், பலவன்சாத்து, வேலூர்-2 | ரூ.7,220/- |
| 11. | திரு.சிவராம் (53/2021) த/பெ வஜ்ஜிரவேல், (Document Writer Typist), எண்.35, பஜனை கோயில் தெரு, பலவன்சாத்து, வேலூர். | ரூ.220/- |
| 12. | திரு.சுப்பிரமணி (50/2021) த/பெ பார்த்தசாரதி, எண்.50, அருகதம்பூண்டி பெரிய தெரு, தோட்டபாளையம், வேலூர். | ரூ.15,55,100/- |
| 13. | திருமதி.ஜெயபாரதி (34/2021) க/பெ நாகப்பன், சிவநாதபுரம், கொல்லைமேடு, ஊசூர், வேலூர் | ரூ.4,800/- |
| 14. | திரு.கார்த்தி (23/2021) த/பெ நாகப்பன், கொல்லைமேடு, சிவநாதபுரம், ஊசூர், வேலூர் | ரூ.5,900/- |
| 15. | திரு.சங்கர் (54/2021) த/பெ ராமசந்திரன், எண்.16, பிள்ளையார் கோயில் தெரு, வேலப்பாடி, வேலூர். | ரூ.2,120/- |
| 16. | திரு.சலீம் (36/2021) த/பெ உசேன் ஷாப், எண்.33, ஆயுதப்படை காவலர் குடியிருப்பு, வேலூர், (Document Writer –Assistant) | ரூ.2,000/- |
| 17. | திரு.மினித்குமார் (24/2021) த/பெ சங்கர், காமராஜ் நகர், 2 வது தெரு, தொரப்பாடி, வேலூர். | ரூ.3,740/- |
| 18. | திரு.உதய்குமார், த/பெ கண்ணன், எண்.16, முதல் மாடி, ஆரணி சாலை, வேலப்பாடி, வேலூர்-1 (தட்டச்சு செய்யும் அலுவலகம் நடத்தி வருபவர்) | ரூ.500/- |
| 19. | திரு.ரவி (52/2021) த/பெ ஏகாம்பரம், எண். 2சி1, காமராஜர் குறுக்கு தெரு, சேண்பாக்கம், வேலூர் (பத்திர எழுத்தர்) | ரூ.10,000/- |
| 20. | திரு.மனோஜ்குமார் (50/2021) த/பெ சிவராஜ், எண்.38, தென்றல் நகர், சத்துவாச்சாரி, வேலூர்.(பத்திர எழுத்தர்) | ரூ.1,030/- |
| 21. | திரு.ஜாவித், த/பெ பாப் ஜான், எண்.252/2, பீடி கோட்ரஸ், பெருமுகை, வேலூர் மாவட்டம் (பதிவறை -1 அறையில் அரசு ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை கையாண்டு கொண்டு இருந்தவர்) | ரூ.10/- |
| 22. | திரு.கோபி த/பெ நைனாதுரை, எண்.24/2, 3-வது குறுக்கு தெரு, பாரதி நகர், காட்பாடி, வேலூர். | ரூ.90,000/- |

7. பின்னர், காத்திருப்போர் அறையை சோதனை செய்ய, பொது மக்கள் உட்காருவதற்கான சுவற்றை ஒட்டியவாறு உள்ள ஸ்லாப்புகளுக்கு கீழே வைக்கப்பட்டிருந்த பழுதடைந்த கணினிகள் மற்றும் பிரிண்டர்களுக்கு இடையில் பணம் கத்தையாக இருந்தது.

அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் பணம் ரு.1,01,500/- இருந்தது. அந்த பணம் குறித்து அங்கிருந்தவர்களிடமும், இணை சார் பதிவாளர்-1 திருமதி.வனிதா, இணை சார் பதிவாளர்-2/கண்காணிப்பாளர் திரு.நித்தியானந்தம் மற்றும் அலுவலர்களிடம் விசாரித்ததில் யாரும் மேற்படி தொகைக்கு உரிமை கோரவில்லை மேலும் யாரும் உரிமை கோராததால் அந்த பணம் ரு.1,01,500/- வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது.

8. மேலும் காத்திருப்போர் அறைக்கு அடுத்து உள்ள டைனிங் ஹாலை சோதனை செய்ய, அந்த ஹாலில் பணம் ஏதும் இல்லை. அந்த அறைக்கு அடுத்து பதிவறை-1-யை பார்க்க, பதிவறை-1 எழுத்தரின் இருக்கையும் மேஜையும், இரும்பு ரேக்குகளில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையை சோதனை செய்ய, அந்த அறையில் பணம் ஏதும் இல்லை. ஆனால், தனி நபராகிய திரு.ஜாவித் த/பெ பாப் ஜான் என்பவர் அலுவலக ஆவணங்களை கையாண்டு கொண்டிருந்தார்.

9. பின்னர், பதிவறை-1-க்கு கிழக்கு திசையில் உள்ள பயன்பாட்டில் இல்லாத கண்ணாடி தடுப்புகளாலான சிறிய டைனிங் ஹாலை சோதனை செய்ய, அதில் உணவருந்த மேஜைகளும், பென்ச்களும் வைக்கப்பட்டிருந்தன. மேலும், ஒரு ஜெனரேட்டரும் இருந்தன. அந்த அறையை சோதனை செய்ய, அந்த ஜெனரேட்டருக்கு கீழே பணம் கத்தையாக இருந்தது. அதை எடுத்து எண்ணிப் பார்க்க, பணம் ரு.82,200/- இருந்தது. அந்த பணம் குறித்து இணை சார் பதிவாளர்-1 திருமதி.வனிதா, இணை சார் பதிவாளர்-2/கண்காணிப்பாளர் திரு.நித்தியானந்தம் மற்றும் அலுவலர்களிடம் விசாரித்ததில் யாரும் உரிமை கோராததால் அந்த பணம் ரு.82,200/- வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேலும், அவ்விடத்தில் ஒரு பிளாஸ்டிக் கவரில் ஆவண எண்கள்.9492/2021, 9074/2021, 9411/2021, 9412/2021, 9415/2021, 9416/2021, ஆகிய பத்திரங்களின் நகல்களுக்கு இடையில் பணம் இருந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்க, ரு.8,500/- இருந்தது. அந்த பணத்திற்கு யாரும் உரிமை கோராத காரணத்தினால் மேற்படி தொகை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது.

10. பொது மக்கள் உபயோகப்படுத்தும் கழிவறையை அலுவலகத்திற்கு வெளியில் சென்று சோதனை செய்ததில், அந்த கழிவறையின் திறந்திருந்த கதவிற்கு பின்னால் பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் பணம் ரு.11,200/-

இருந்தது. அந்த பணம் குறித்து அங்கிருந்தவர்களிடமும், இணை சார் பதிவாளர்-1 திருமதி.வனிதா, இணை சார் பதிவாளர்-2/கண்காணிப்பாளர் திரு.நித்தியானந்தம் மற்றும் அலுவலர்களிடம் விசாரித்ததில் யாரும் உரிமை கோராததால் அந்த பணம் ரு.11,200/- வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் யாரும் உரிமை கோராத பணம் ரு.2,03,400/- கைப்பற்றப்பட்டது.

11. இணை சார் பதிவாளர்-1 திருமதி.வனிதா என்பவரிடம் அலுவலக 1) ஊழியர்கள் வருகைப்பதிவேடு, 2) DATA ENTRY OPERATOR AND CAMERA OPERATOR ATTENDANCE REGISTER, 3) அலுவலக பணியாளர்களின் தனி நபர் பண கையிருப்பு பதிவேடு, 30.09.2021 தேதிக்கான 4) "A" Account கணக்கு மற்றும் 5) "D1" கணக்கு சம்மந்தமான தாள்கள், 6) "H" கணக்கு பதிவேடு வழக்கிற்காக கைப்பற்றப்பட்டது. 7) மேலும் படைவீரர் கொடிநாள் வசூல் தொகை குறித்து விசாரித்து அதன் விவரங்களான ரு.1,50,000/- கொடிநாள் வசூல் இலக்கு வசூலிக்கப்பட்டு 24.06.2021 அன்று ரு.40,000/-, 29.07.2021-அன்று ரு.80,000/-, 26.08.2021 அன்று ரு.30,000/- வரைவோலைகளாக எடுக்கப்பட்டுள்ளது அதன் நகல் வழக்கிற்காக கைப்பற்றப்பட்டது.

12. மேற்படி இரு துறை திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட யாரும் உரிமை கோராத வகையில் இருந்த பணம் ரு.2,03,400/- குறித்தும், இணை சார் பதிவாளர்-1 மற்றும் 2 ஆகியோர் அலுவலகத்தில் இருந்த ஆவண எழுத்தர்கள், ஆவண எழுத்தர்களின் உதவியாளர்கள், Advocates ஆகியோர்கள் இருந்தது பற்றியும் தனி நபர் அலுவலக ஆவணங்களை கையாண்டுக்கொண்டிருந்தது குறித்தும் இணை சார் பதிவாளர்-1 திருமதி.வனிதா அவர்களிடம் கேட்க, அவர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார்.

13. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது 30.09.2021 மாலை சுமார் 16.40 மணிக்கு துவக்கி 01.10.2021 சுமார் 00.30 மணிக்கு முடிக்கப்பட்டு. நிகழ்வுகள் அனைத்தையும் இருதுறை திடீர் கூட்டு சோதனை செயல்முறை தயார் செய்து, அதில் நானும், காவல் ஆய்வாளர் திரு.S.விஜய் மற்றும் இணை சார்பதிவாளர் எண்-1

திருமதி.S.வனிதா ஆகியோர் கையொப்பம் செய்தோம். அதன் நகல் திருமதி.S.வனிதா இணை சார்பதிவாளர் எண்-1, வேலூர், வேலூர் மாவட்டம் என்பவருக்கு வழங்கி, ஒப்புதல் பெறப்பட்டது.

14. திருமதி.S.வனிதா, த/பெ.சண்முகம், எண்-1 இணை சார் பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை), ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகம், வேலூர் தனது பதவியை அதிகார துஷ்பிரயோகம் செய்து ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் ஆகியோர் மூலம் பொது மக்களிடம் இருந்து லஞ்சமாக பணத்தை கேட்டு பெறும் திருமதி. S.வனிதா, அவர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட லஞ்ச பணம் ரு.2,03,400/-ம் கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது தயார் செய்யப்பட்ட அசல் செயல்முறை ஆகியவற்றையும் தங்களிடம் ஒப்புவிக்கிறேன். இப்படிக்கு. Sd/-xxxxxxx 1/10/2021 R.விநாயகமூர்த்தி முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர். Sir/Madam, Received the complaint on 01.10.2021 at 15.30 hrs and a case in Vigilance and Anti-Corruption, Vellore Detachment Cr.No.15/2021, u/s 7(a) of Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 102 Cr.P.C was registered on 01.10.2021 at 16.30 hrs. Sd/-xxxxx 01/10/2021 S.Vijay, INS/VAC/VLR.

The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned.

01/10/2021
(S.VIJAY)
INS/VAC/VLR.